# சுதந்திர தினம்

விளம்பரச் சிறப்பிதழ் 15.8.2025

## மகிழ்ச்சி கருணை இல்லத்திற்கு சிறந்த சமூக சேவைக்கான விருது

திருப்பூர், ஆக. 15: திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் அருகே வெள்ளிரவெளியில் செயல்பட்டு வரும் மகிழ்ச்சி கருணை இல்லத்தில் 50க்கும் மேற்பட்ட ஆதரவற்ற முதியவர்கள் தங்கி உள்ளனர். இவர்களின் அன்றாட உணவு, உடை, பாதுகாப்பான இருப்பிடம் போன்றவற்றை செவிலியர்களை நியமித்து வழங்கி பராமரித்து வருகின்றனர். ஆதரவற்ற முதியவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுப்பது மட்டுமல்லாது, முதியவர்களை மகிழ்விக்கவும், மன அழுத்தத்தில் இருந்து விடுபடச் செய்யவும் மாதந்தோறும் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டிற்கான சிறந்த சமூக சேவைக்கான அக்னிச் சிறகுகள் விருது மகிழ்ச்சி கருணை இல்லத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. திருமுருகன் பூண்டி அருகே உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மகிழ்ச்சி கருணை இல்லத்தின் நிறுவனர் விஜயகுமார் மற்றும் மாலதி விஜயகுமார் ஆகியோரிடம் சிறந்த சமூக சேவைக்கான விருது வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜி.கே.வாசன், டாக்டர் அப்துல்கலாமின் அறிவியல் ஆலோசகர் பொன்ராஜ், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் திருப்பூர் மாவட்ட தலைவர் ரவிக்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டு விருதினை வழங்கினர்.



மகிழ்ச்சி கருணை இல்லத்திற்கான சிறந்த சமூக சேவைக்கான விருதினை இல்லத்தின் நிர்வாகிகள் விஜயகுமார் மற்றும் மாலதி விஜயகுமார் பெற்றுக்கொண்டனர்.

### தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்

## புதிய ரோட்ராக்ட் சங்க நிர்வாகிகள் பதவி ஏற்பு

திருப்பூர், ஆக. 15: திருப்பூர், மங்கலம், வஞ்சிபாளையம் ரோட்டரி சங்கம் சார்பில் தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் புதிய ரோட்ராக்ட் சங்க நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா கல்லூரி வளாகத்தில் நடந்தது. விழாவுக்கு தீரன் சின்னமலை கல்லூரி செயலாளர் கீதாஞ்சலி கோவிந்தப்பன் தலைமை தாங்கினார். கல்லூரி துணைத் தலைவர் முருகசாமி, கல்லூரி தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர். ரேச்சல் நான்சி பிலிப், முதல்வர் டாக்டர் மோகன சௌந்திரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வஞ்சிபாளையம் ரோட்டரி சங்கத் தலைவர் சதாசிவம் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக ரோட்டரி மாவட்ட தாய்ப்பால் தானம் சேர்மன் விசித்திரா கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். சிறப்பு அழைப்பாளராக மாவட்ட தலைவர் செல்வ விக்னேஷ் கலந்துகொண்டு பேசினார். விழாவில் ரோட்டரி சங்க புதிய பட்டய தலைவராக ஷாதியா, செயலாளராக விஜி ஸ்ரீ, பொருளாளராக நஸ்ரின் பானு, ஒருங்கிணைப்பாளராக சுமதி ஆகியோர் பதவியேற்றனர். தொடர்ந்து இவர்களுடன் 30 ரோட்டராக்ட் உறுப்பினர்கள் பதவி ஏற்றனர். முடிவில் வஞ்சிபாளையம் ரோட்டரி சங்க பொருளாளர் ரேகா நன்றி கூறினார்.

தொடர்ந்து ரோட்டரி சங்கம் சார்பில் கல்லூரி லைப்ரரிக்கு புத்தகங்கள் வழங்கப்பட்டது. பின்னர் கோவை, திருப்பூர் ரோட்டரி சங்கம் இணைந்து கேன்சர் நோயாளிகளுக்கு மருந்துகள் வாங்கித்தருவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.




### கிட்ஸ் கிளப் சர்வதேசப் பள்ளியில்

## கிருஷ்ண ஜெயந்தி விழா

திருப்பூர், ஆக. 15: திருப்பூர், ஷெரீப் காலனியில் செயல்பட்டு வரும் கிட்ஸ் கிளப் சர்வதேசப் பள்ளியில் கிருஷ்ண ஜெயந்தி விழா பள்ளி வளாகத்தில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. விழாவுக்கு பள்ளியின் தலைவர் மோகன் கார்த்திக் தலைமை தாங்கினார். நிர்வாக இயக்குனர் ஐஸ்வர்யா நிகில் சுரேஷ் வரவேற்றார். பள்ளியில் பயிலும் பிரி கே.ஜி முதல் 8ஆம் வகுப்பு வரை படிக்கும் 100க்கும் மேற்பட்ட குழந்தைகள், மாணவ- மாணவிகள் கிருஷ்ணர் வேடம் அணிந்து நடனம் ஆடியும், நாடகமாக நடித்தும் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி அனைவரையும் மகிழ்வூட்டினர். தொடர்ந்து மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடந்தன. பள்ளி முதல்வர் நிவேதிகா குழந்தைகளைப் பாராட்டியும், கிருஷ்ண ஜெயந்தியைப் பற்றியும் சிறப்புரை ஆற்றி நன்றி கூறினார்.



திருப்பூர் ஷெரீப் காலனியில் செயல்பட்டு வரும் கிட்ஸ் கிளப் சர்வதேசப் பள்ளியில் கிருஷ்ண ஜெயந்தி விழா பள்ளி வளாகத்தில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

## இன்னுயிர் துறந்து விடுதலைக்காக போராடிய தியாகிகளை நினைவு கூறுவோம்

தியாகம் நடந்துள்ளது. பூமியில் சொர்க்கம் என்பது இருக்குமெனில் அது இந்தியா என பேரரசர் ஜஹாங்கீர் கூறியுள்ளார். பூமியில் பல்வேறு பகுதிகளிலிருந்து பலர் பல நோக்கங்களில் இந்தியாவிற்கு படையெடுத்தனர்.

போர்த்துக்கீசிய மாலுமியான வாஸ்கோடகாமா இந்திய நாட்டின் நறுமணப் பொருட்களான ஏலம், கிராம்பு, மிளகு ஆகியவை கடல்வழியாக உலகின் கரங்களுக்கு சென்றடைய காரணமாக இருந்தார். ஒருவர்பின் ஒருவராக வாணிப நோக்கில் போர்த்துக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், மற்றும் ஆங்கிலேயர்கள் என பாரதத்துக்குள் உள்நுழைந்தனர். இவர்களுள் ஆங்கிலேயர் கிழக்கிந்திய கம்பெனி என்னும் மாபெரும் அமைப்பை உருவாக்கினர். ஆங்கிலேயரின் அதிகாரம் மேலோங்க அரசர்களும் அவர்கள் கட்டுப்பாட்டுக்குள் சென்றனர்.

இந்தியாவிலிருந்து ஆங்கிலேயர் போத்துக்கீசரினை விரட்டினர். மன்னர் ஆட்சி பகுதிகள் மாகாணங்கள் ஆக்கப்பட்டன. மன்னர்களிடம் இருந்து வரி வசூலிக்கப்பட்டது. வரி செலுத்தவில்லை என்றால் கடும் தண்டனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். தாய்மண்ணில் வாழ்வதற்கு வரி செலுத்தும் அவலநிலையை இந்தியர்கள் அனுபவித்தனர். ஒரு சிலர் அதனை ஏற்றுக்கொள்ளாமல் எதிர்த்தனர். அவர்களுள் வீரபாண்டிய கட்டபொம்மன், பூலித்தேவன், மருதுசகோதரர்கள் போன்றவர்களைக் குறிப்பிட்டு கூறலாம். இவர்கள் இந்திய விடுதலை முழக்கமிட்டு இன்னுயிர் நீத்தனர். விடுதலை விருட்சம் காந்தியடிகளின் வருகை போராட்ட வரலாற்றில் புதுமையான அத்தியாயத்தை உருவாக்கியது. காந்தியடிகள் தனது போராட்ட ஆயுதமாக அகிம்சையைக் கையில் எடுத்தார். இதனைத் தடுக்க ஆங்கிலேயர் பல முயற்சிகளை நடத்தினர். எனினும் அவை தோல்வியடைந்தன.

1919ம் ஆண்டில் ஆங்கிலேயர் அரங்கேற்றிய மாபெரும் ரத்த சரித்திரம் படைத்த "ஜாலியன் வாலாபாக்" படுகொலைச் சம்பவம் நீங்கா ரத்த வாடையை ஆங்கிலேயர் கையில் படரச் செய்தது. சோதனைகள் வந்தும் விடுதலை வேட்கை தணியவில்லை. உப்புச் சத்யாகிரகம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் என்பன இந்தியர்களை ஒரே நேரத்தில் ஒருங்கிணைத்தது. சுதந்திரப் போராட்ட வீரர்கள் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பல்வேறு வீரர்களின் உன்னதமான பங்களிப்பு போற்றுதற்குரியது ஆகும். குறிப்பாக காந்தியடிகள், நேருஜி, பகத்சிங், பாரதியார், வாஞ்சிநாதன் போன்றவர்களைக் குறிப்பிடலாம். இவர்கள் போன்ற பல போராளிகளின் அயராத உழைப்பும் பாரத தேசத்தின் மீது கொண்ட பற்றுமே இன்று சுதந்திரக் காற்றை நாம் அனுபவிக்க வழிவகை செய்தது எனலாம். இரண்டாம் உலகப் போரில் ஏற்பட்ட மாபெரும் பொருளாதார நெருக்கடியானது ஆங்கிலேயருக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. அதேவேளை இந்தியர்களின் தொடர் போராட்டத்திற்கும் இவர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை.

இதன் காரணமாக 1947ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் நாள் இந்தியாவிற்கு சுதந்திரத்தினை வழங்கினர். இன்று நாம் 79வது சுதந்திர தினத்தை கொண்டாடுகிறோம். சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத்திற்கு சன்மானமாக சுதந்திரம் கிடைத்தது. பல தியாகங்களால் தீட்டப்பட்ட நம் சுதந்திர இந்தியாவை அவர்களின் புகழ் மங்காத வகையில் வளர்ச்சியடையச் செய்து பேணி காப்பது நம் அனைவரது கடமையாகும்.

### சுதந்திர தினத்தன்று முதலமைச்சர்கள் தேசிய கொடி ஏற்றும் உரிமையை பெற்றுத் தந்தவர் கலைஞர்..

சுதந்திர தினம், குடியரசு தினம் ஆகிய நாட்களில் மாநில ஆளுநர்களே தேசியக் கொடியை ஏற்றும் உரிமையுடையவர்களாக இருந்தனர். தேசிய அளவில், சுதந்திர தினத்தில் பிரதமரும், குடியரசு தினத்தில் ஜனாதிபதியும் கொடியேற்றும் உரிமையுடையவர்களாக இருக்கும்போது, மாநிலங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்குத் தலைமை வகிக்கும் முதல்வர்களுக்கு கொடி ஏற்றும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்று குரல் கொடுத்தவர் கலைஞர் மு.கருணாநிதி. இதனால், 1972ம் ஆண்டு சுதந்திரத்தின் வெள்ளி விழாவையொட்டி இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் சுதந்திர தினத்தில் அந்தந்த மாநில முதல்வர்கள், தலைமைச் செயலகத்தில் கொடியேற்றுவதற்கு மத்திய அரசு அனுமதி அளித்தது. இந்த உரிமையைப் பெற்றுத் தந்தவர் கலைஞர் கருணாநிதி.




















